அசல் வழக்கு எண்: 57 /2021
நாள்: 11 .09.2024
PW1
பெயர் : மாரியப்பன்
த/பெ : சுப்பையா
வயது : 71
ஊர் : மாராயபுரம்

2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1 முதல் 3** பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜர் இல்லை.

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா இடத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு மின்சாரம் இணைப்பு வழங்கும் போது நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. இந்த மின் இணைப்பு மேற்படி கோவில் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.நான் வசிக்கும் மாராயப்பட்டி கிராமத்தில் அடைக்கன் மகன் சண்முகம் என்பவர் உள்ளரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சண்முகம் என்பவர் தான் ஆஞ்சநேயர் கோவிலுக்கு மின்இணைப்பு பெற்று தந்தார் என்றால் செய்திருக்கலாம் , ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது .

2. 4,5 பிரதிவாதிகள் மேற்படி கோவிலில் என்ன பொறுப்பு வகிக்கிறார்கள் என்றால் பொறுப்பு எதுவும் வகிக்கவில்லை. என்ன காரணத்திற்காக 4,5 பிரதிவாதிகளை இந்த வழக்கில் நான் சேர்த்துள்ளேன் என்றால் கஜா புயலில் எனது வீட்டின் மேற்கூரை பிரிந்துவிட்டது, அதன் சுவரை பிரதிவாதிகள் இடித்து விட்டார்கள். அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடிவடிக்கை எடுத்தேனா என்றால் புகார் கொடுத்து காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தார்கள். இது குறித்து ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவா இடத்தில் கோவில் கட்டியது தொடர்பாக யார் யார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

மேற்படி தாவா சொத்தில் கோவில் கட்டிய நபர்களையோ , அதன் நிர்வாக பொறுப்பாளர்களையோ, இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஏற்கனவே இருந்த கூரை வீடு ஊர் மக்களால் கட்டி கூரை போட்டு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல நான் கட்டியது . நான் மாராயப்பட்டி கிராமத்திற்கு எப்போது முதன்முதலில் வந்தேன் என்றால் 1985 ல் வந்தேன்.

5. அப்போது நான் வந்த போது எனக்கு இருப்பிடம் இல்லாததால் ஊர் மக்கள் தாவா இடத்தை எனக்கு தங்குவதற்கு அனுமதி அளித்து அதன் பெயரில் நான் தங்கினேன் என்றால் சரிதான். அதன் பிறகு, தாவா இடத்தில் இருந்து 300 அடி தள்ளி எனது மகனால் வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். இப்போது அனைவரும் அந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் அவ்வாறு அந்த வீட்டிற்கு சென்ற பிறகு, எனக்கு கொடுக்கப்பட்ட தாவா சொத்தில் ரேசன் கடை கட்ட வேண்டும் என்பதால் அதை காலி செய்து கொடுக்க ஊர்மக்கள் பஞ்சாயத்து பேசி கேட்டார்கள் என்றால் சரிதான்.

6. நான் 2008 ம் ஆண்டில் அவ்வாறு காலி செய்து கொடுப்பதாக பஞ்சாயத்தில் எழுதி கொடுத்துள்ளேனா என்றால் மிரட்டி வாங்கினார்கள். தாவா சொத்தில் இருந்த மண்சுவருடன் கூடிய கூரை வீடு முழுவதும் கஜா புயலின் போது இடிந்து தரைமட்டமாகிவிட்டது என்றால் சரியல்ல. மண்மேடு மட்டும் தான் இருந்தது என்றாலும், அதை தட்டிவிட்டு ஆஞ்சிநேயர் கோவில் கட்டப்பட்டது என்றாலும் சரியல்ல, ஹாலோபிளாக் சுவர் இருந்தது. தாவா இடத்தில் உள்ள ஆஞ்சிநேயர் கோவில் புலஎண். 144/101 ல் அடங்கியது என்றால் சரிதான்.

7. நான் வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 144/127 என்பது மாராயப்பட்டி கிராமத்திற்குள் வரவில்லை என்றால் சரிதான் அதை எங்கு உள்ளது என காண்பிக்க வேண்டும் என்பது தான் வழக்கம். 4,5 பிரதிவாதிகள் தாவா இடத்தை தங்களுக்கு கொடுக்க வேண்டும் என என்னிடம் நேரடியாக பிரச்சனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஊர் பொது மக்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தால் ஊர் பொதுமக்கள் வழக்காகிவிடும் என்பதால் 4,5 பிரதிவாதிகளை மட்டும் இவ்வழக்கல் தரப்பினராக சேர்த்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தில் ஆஞ்சிநேயர் கோவில் கட்டப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய வழக்கு என்று சொன்னால் சரியல்ல. நான் தேவையில்லாமல் 4,5 பிரதிவாதிகளை இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளதால் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க கடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.